பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**28 03 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான நவீன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அதிக அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** நகர்ப்புறங்களில் குழாய்வழி சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து மத்திய அமைச்சர்கள் நிலையிலான ஆய்வுக்கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

**3.** மேற்குவங்க மாநிலத்தில் பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு திரிணமுல் காங்கிரஸ் அரசே காரணம் என்று பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

**4.** பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

**5.** ஐ பி எல் கிரிக்கெட்டில் பெங்களூரு - ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான நவீன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் சர்வதேச விமான நிலையத்தின் முதல் பகுதியை திறந்துவைத்து பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீடு ஆறு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள், அதிவிரைவுச்சாலைகள் போன்றவற்றுக்கு 17 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு லட்சம் கிலோமீட்டர் தூரத்திற்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

2014-ஆம் ஆண்டுக்கு பிறகு 40 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு ரயில்வே இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், 100 சதவீதம் இருப்புப் பாதைகள் அகலப்படுத்தப்பட்டு, மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்களை காஷ்மீர் பள்ளத்தாக்குடன் இணைப்பதற்கான ரயில்வே கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

துறைமுகங்களின் எண்ணிக்கை இருமடங்காக்கப்பட்டு உள்ளதாகவும், உள்நாட்டு நீர்வழி போக்குவரத்தை விரிவாக்கம் செய்யும் பணிகளும் நடைபெற்று வருவதாகவம் பிரதமர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நகர்ப்புறங்களில் குழாய்வழி சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த மத்திய அமைச்சர்கள் நிலையிலான ஆய்வுக்கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி, மத்திய நகர்ப்புற வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு மனோகர்லால், நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் பொது விநியோகத் திட்ட அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி ஆகியோர் இந்த ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

நாடு முழுவதிலும் உள்ள நகர்பகுதிகளில் குழாய்வழி சமையல் எரிவாயுவை விநியோகிக்க தேவையான கட்டமைப்பு வசதிகள், பராமரிப்பு கட்டமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது குறித்தும்,

தடையின்றி நுகர்வோருக்கு எரிவாயுவை விநியோகிப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய திரு ஹர்தீப் சிங் புரி, குழாய்வழி சமையல் எரிவாயு கட்டமைப்பு எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதாக கூறினார்.

மாநிலங்களும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் இந்த திட்டத்திற்கு மாறுவதற்கு, நுகர்வோரை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் திரு மனோகர்லால், குழாய்வழி சமையல் எரிவாயு திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த வேண்டும் என்றும், இதற்கான அனுமதி ஒற்றைச்சாளர முறையில் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, எரிவாயு விநியோகம் தங்கு தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், விநியோக கட்டமைப்பை கண்காணிக்க மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கேமரூன் சென்றுள்ள வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று, நார்வே வெளியுறவு அமைச்சர் திரு **Espen Barth**-யும், பிரிட்டன் வர்த்தக அமைச்சர் திரு **Chris Bryant**-யும் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக, திரு கோயல் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலக வர்த்தக அமைப்பில் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வர்த்தகம் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு உலக நாடுகளுக்கு இடையே கருத்தொற்றுமை எட்டப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

வளர்ந்துவரும் நாடுகளின் கோரிக்கைகளுக்கு உலக வர்த்தக அமைப்பு செவிசாய்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகத்தில் அனைத்து நாடுகளுக்கும் சமநிலையிலான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான தேசிய அறிவியல் விருதுகளுக்கான பரிந்துரைகளை இன்று தொடங்கி மே மாதம் 11-ஆம் தேதிவரை சமர்ப்பிக்கலாம் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

விஞ்ஞான் ரத்னா, விஞ்ஞான் ஸ்ரீ, விஞ்ஞான் யுவசாந்தி விருதுகள் மற்றும் விஞ்ஞான் குழு விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக தெரிவித்தார்.

இந்த விருதுகள் அர்ப்பணிப்பு உணர்வோடு நாட்டிற்காக புதிய கண்டுபிடிப்புகளை கொண்டுவருவதற்கான கருவியாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

உலகின் அறிவுசார் சக்தியாக இந்தியாவை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த விருதுகள் ஊக்கத்தை தரும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் நிலவும் பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் அரசே காரணம் என்று பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மேற்குவங்கத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு மிக குறைந்த ஊதியம் வழங்கப்படுவதாகவும், பணிச்சூழலும் மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பாக செல்வி மம்தா பானர்ஜி, தேர்தல் ஆணையத்தை குறை கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் கூறினார்.

இப்பணிகள் நாடு முழுவதும் எவ்வித பிரச்சினையும் இன்றி மேற்கொள்ளப்பட்ட போதிலும், மேற்குவங்க அரசு மட்டும் இதனை ஒரு பிரச்சினையாக நீதிமன்றம் வரை கொண்டு சென்றதாகவும் குற்றம் சாட்டினார்.

கேரளம் மற்றும் தமிழகத்தில் கூட இப்பணிகளுக்கு திமுக மற்றும் இடதுசாரி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், பணிகள் எவ்வித தடையும் இன்றி முழுமையாக நிறைவு பெற்றதாகவும் திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் திரிணமுல் காங்கிரஸ் அளித்த புகாரின்பேரில், மால்டா மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த காவல்துறை பார்வையாளரை தேர்தல் ஆணையம் மாற்றம் செய்துள்ளது.

பீகார் மாநிலத்தை சேர்ந்த **Hriday Kant, Sujapur, Baishnabnagar, Mothabari, Manikchak** தொகுதிகளுக்கு புதிய பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மதுரையில் **100** சதவீத வாக்களிப்பை உறுதி செய்யும் வகையில், மதுரை மாநகர காவல்துறை சார்பில், விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி இன்று நடைபெற்றது.

வாக்காளர்கள் அச்சமின்றி தங்கள் வாக்குகளை செலுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - ரகுராஜா - 51 Sec. )***

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு - ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

பெங்களூருவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

ஐ பி எல் போட்டிகள் மே மாதம் 31-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

--------------

தேசிய தொடர் ஓட்டப் போட்டியின் மகளிர் பிரிவில் தமிழக அணி தங்கப்பதக்கம் வென்றது.

**சண்டிகரில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் தொடர் ஓட்டப் பிரிவில், தமிழகம் இப்பதக்கத்தை கைப்பற்றியது.**

**--------------**

**வியட்நாம் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rakshitha Sree இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.**

**<<<<<<END>>>>>>**